

# நித்தியத்திற்குள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** சங் 80; 1தெச 4:17; வெளி 21:9–27; ஏசா 25:8; வெளி 7:17; 21:4; யோவான் 6:44.

**மனன வசனம்:** பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். 1யோவான் 3:2.

உங்கள் எதிர்காலம் எப்படி இருக்கும்? உங்களுக்கு முன்னால் என்ன காத்திருக்கிறது? அச்சுறுத்தலாம், உற்சாகமூட்டலாம், பயமுறுத்தலாம், அதேசமயம் அற்புதமாகவும் தோன்றலாம். இயேசு உண்மையுள்ளவர் என்பதையும், அவருடைய வார்த்தைகள் சத்தியமானவை என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். வெளி 3:14. இனிவரும் காலங்களில் கொந்தளிப்பான நேரங்கள் இருக்கும் மத் 24:21,22; ஆனால் உங்களைவிட்டு விலகுவதுமில்லை, உங்களைக் கைவிடுவதுமில்லை என்று அவர் வாக்குறுதி அளித்துள்ளார். எபி 13:5. அவர் சொன்னதை அப்படியே செய்வார், அவர் எப்போதும் அப்படியே செய்து வருகிறார், இனியும் செய்வார். எபி 10:23. மேலும், முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். மத் 24:13.

இந்தப் பூமியில் நமக்கு இன்னும் எத்தனை நாட்கள் மிச்சமிருக்கிறது என்பது முக்கியமல்ல; நாம் நம் கண்களை இயேசுவின்மீது நிலைநிறுத்தி, அவரையே உறுதியுடன் நோக்கிக்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய கவனத்தைத் திசை திருப்பத் துடிக்கும் இந்த உலகத்தில் அது எப்போதும் எளிதான காரியம் அல்ல. ஆனால், தாவீது ராஜாவைப்போல நாமும் இப்படிச் சொல்வோமாக: ‘என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்’ சங் 25:15.

இந்த வாரம், பரலோகத்தின் வெகுமதியையும் (மத் 5:12; வெளி 22:12), பரலோகம் எப்படி இருக்கும் என்பதையும், எல்லாவற்றிற்கும் மேலாக, நம்மைப் படைத்தவர், மரணபரியந்தம் நம்மை நேசித்தவர், நம் பாவங்களிலிருந்து நம்மை மீட்டவர், விரைவில் மீண்டும் வரப்போகிறவருடன் இறுதியாக இணைந்திருப்பது எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்பதையும் கற்றுக்கொள்வோம். அதுவரை நாம் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்கவேண்டும்.

*2026, ஜூன் 27 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# இன்றைய வாழ்க்கை

இந்த உலகம் தவிப்பதையும் வேதனைப்படுவதையும் காண்கிறோம்; இயேசு சொன்ன அடையாளங்கள் நிறைவேறி வருகின்றன. யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும், ஜனத்திற்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்புதலும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும், துன்புறுத்தல்களும் நம்மைச் சுற்றி நடந்துகொண்டிருக்கின்றன. மத் 24:6-11. காலம் செல்லச்செல்ல இவை தீவிரமடைந்து கொண்டே வருகின்றன. ஆம், நாம் ஒரு தீவிரமான காலத்தில் வாழ்கிறோம், இந்தக் காலத்தில் தேவனோடு எப்போதும் நிலைத்திருக்கும் ஓர் உறவு நமக்கு மிகவும் அவசியமாகும்.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. 1பேதுரு 4:7. அன்றே அது முக்கியமானதாக இருந்தால், இன்று நாம் தேவனோடுள்ள நமது தனிப்பட்ட உறவை மேலும் உறுதிப்படுத்தவும் பலப்படுத்தவும் வேண்டியது மிகஅவசியம். எவ்வளவு காலம் நீடித்தாலும், நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் சரி, நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையும் எப்போதும் குறுகியதே. யாக் 4:13, 14 சொல்கிற எச்சரிப்பு எவ்வளவு உண்மை என்பதை அறிவோம். இப்போது இந்த வார்த்தைகளை வாசித்துக்கொண்டிருக்கும் உங்களில் சிலர், இன்றைய பொழுது முடிவதற்குள் உயிரோடு இல்லாமல்கூட போகலாம். விழுந்துபோன இந்த உலகில் வாழ்வதன் வருத்தமான ஓர் உண்மை இதுதான். எனவே, தேவனோடு உள்ள நமது உறவை உறுதிப்படுத்துவதும், அவர் நமக்குத் தேவைப்படுவதை எப்போதும் உணர்ந்து, அவருடைய இரட்சிப்பின் கிருபையில் நிலைத்திருப்பதும் எவ்வளவு முக்கியமானது?

**சங் 80 தேவனிடம் ஓர் அழகான வேண்டுகோளை முன்வைக்கிறது. இந்த அதிகாரத்தை வாசியுங்கள், குறிப்பாக 1-3,14-19 ஆகிய வசனங்களைக் கவனியுங்கள்; அங்கே 'எங்கள்' என்று வரும் இடங்களில் 'என்' என்று மாற்றி வாசித்துப் பாருங்கள். இந்தச் சங்கீதம் எழுதப்பட்ட காலம், இடம் மற்றும் சூழல் எவ்வளவு வித்தியாசமாக இருந்தாலும், எந்த வழிகளில் நீங்கள் இதை உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கமுடிகிறது?**

---

நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஆவிக்குரிய எழுப்புதல் அவசியமாகும். தேவன் நமக்காகச் செய்தவற்றையும், செய்து கொண்டிருப்பவற்றையும் மறந்துவிடுவது அல்லது அதில் அசட்டையாக இருப்பது மிகவும் எளிது. எவ்வளவு போராட்டங்களுக்கு மத்தியிலும், ஓர் உண்மையான விசுவாசி இவ்வாறு ஜெபிக்காமல் இருக்கமுடியாது: 'உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது நாங்கள் இரட்சிக்கப்படுவோம்' சங். 80:19. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதையும் விசுவாசத்தினால் உங்களுக்கு அருளப்பட்ட அவருடைய பூரண நீதியினால் நீங்கள் மூடப்பட்டதையும் நீங்கள் உணரும்போது, நீங்கள் அவருக்குள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உறுதியாக அறிந்துகொள்ளலாம்.

---

**தேவனுடைய நீதிமட்டுமே நம்மை இரட்சிக்கிறது என்பதை அறிவோம், அப்படியானால் அவரது முகம் நம்மீது 'பிரகாசிப்பித்தல்' என்பதன் அர்த்தம் என்ன?**

# இறுதியாக, முகமுகமாய்

நாம் தேவனுடன் நெருக்கமாக இருக்கவே படைக்கப்பட்டோம். ஆதி 2:7. மனுக்குலத்தைப் படைத்ததுமுதல், அவரோடு சிதைந்துபோன நம் உறவைச் சீரமைக்க, தேவன் எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறார். யோவான் 3:16. நித்தியத்தை நம் இருதயங்களில் வைத்திருக்கிறார், ஆனாலும் ஆதிமுதல் அந்தம் வரை தேவன் செய்த கிரியைகளை மனிதர்களால் கிரகிக்கமுடியாது. பிர 3:11. நம்மைச்சுற்றிலும், நமக்குள்ளும்கூட நடந்துகொண்டிருக்கிற ஒரு பெரிய போராட்டத்தின் ஒரு பகுதியாக நாம் இருக்கிறோம். ஆனால், தேவன் நம்முடன் வைக்க விரும்புகிற அந்த உறவை மீண்டும் பெறுவதற்காக, எவ்வளவு பெரிய விலை கொடுக்கப்பட்டிருக்கிறது, யோசியுங்கள்! அநேக நேரங்களில் நாம் இந்த உலகப் போராட்டங்களிலும் சோதனைகளிலும் மூழ்கிப்போய்விடுகிறோம்; ஆனால், பிலி 3:20,21 சொல்வதை வாசியுங்கள்.

இந்த உலகம் முடிவை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கும் நிலையில், ஒருநாள் கிழக்கு வானத்தில் ஒரு சிறிய கருமேகம் தோன்றும் என்பதை அறிவோம். அது நெருங்கி வரவர, அந்த மேகத்தின் மேல் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர் வீற்றிருப்பதைக்காண்போம்; அவர் தமது சிரசில் ‘பொற்கிரீடத்தையும், தமது கையில் கருக்குள்ள அரிவாளையும்’ பிடித்திருப்பார். வெளி 14:14. இயேசு ஆயிரமாயிரம் தூதர்களோடு வருவார். மத் 25:31. மேலும் ஒவ்வொரு கண்ணும் அவரைக் காணும். வெளி 1:7. அவர் இறங்கி வரும்போது, அவருடைய ஆரவாரச் சத்தத்தையும், தேவ எக்காளச் சத்தத்தையும் நாம் கேட்போம்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களின் கல்லறைகள் திறக்கப்பட்டு, அவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 1தெச 4:16. தங்களை அழைக்கிறவருடைய சத்தத்தை அவர்கள் அறிந்துகொள்வார்கள். யோவான் 5:28.

**அடுத்தது என்ன நடக்கும்? 1தெச 4:17. இறுதியாக, பிலி 2:10,11-ல் பவுல் எழுதியுள்ள காரியங்கள் இந்த அண்டசராசரம் முழுவதும் எதிரொலிக்கும்.**

---

என்ன ஓர் அற்புதமான, மகத்துவமான சிந்தனை! ஒருநாள் நாம் இயேசுவைக் காண்போம், உண்மையிலேயே, மெய்யாகவே அவரைக் காண்போம். அவருடைய சத்தத்தை நாம் கேட்போம், அவரே கர்த்தர் என்று அறிக்கை செய்வோம். யாரைப்பற்றி நாம் வாசித்தோமோ, யாரிடம் ஜெபித்தோமோ, யாரைப்பற்றி மற்றவர்களிடம் பேசினோமோ, நம் இருதயம் யாருக்காக ஏங்கியதோ அவரை நாம் நேருக்கு நேராகக் காண்போம். இதை நாம் உறுதியாகவும் நிச்சயமாகவும் நம்பலாம், ஏனெனில் தேவன் உண்மையுள்ளவர், அவருடைய வாக்குத்தத்தங்கள் சத்தியமானவை. வெளி 22:6.

எக்காளங்கள் முழங்கி, ஒவ்வொரு மனித கண்ணும் இயேசுவைக் காணும் அந்தத் தருணத்தில், இவ்வளவு காலம் நாம் காத்திருந்தது வீணாகவில்லை என்பதை உணர்வோம். நாம் விடாமுயற்சியுடன் செய்த ஒவ்வொரு ஜெபமும், அவருக்கு முன்னுரிமை கொடுத்து நாம் செலவழித்த ஒவ்வொரு தருணமும், அவருக்காக நாம் தைரியமாகப் பேசிய ஒவ்வொரு முறையும், நாம் சந்தித்த ஒவ்வொரு சோதனையும், அவருடைய முகத்தைத் தரிசிக்கும்போது சகலமும் முற்றிலும் அர்த்தமுடையவையாக மாறும். வெளி 22:4.

# மணவாட்டி

சீடராகிய யோவான் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்தபோது, நாம் தேவனோடு நித்தியமாக மீண்டும் இணைந்திருப்பது எப்படியிருக்கும் என்பதைப்பற்றிய ஒரு தரிசனத்தைப் பெற்றார்.

**வெளி 21:9–11 இல், என்ன ஒப்புமை கொடுக்கப்பட்டுள்ளது? அந்த ஒப்புமை ஏன் பயன்படுத்தப்பட்டது?**

அந்த மணவாட்டி மிகவும் அழகாக இருக்கிறாள், அவளுடைய திருமண நாளில் அனைவரும் அவளைக் காண விரும்புகிறார்கள். ஒரு திருமண நாள் என்பது மணமகனுக்கும் மணமகளுக்கும் ஒரு புதிய வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைவதுபோலவே, தேவன் மீண்டும் வரும்போது அவரோடு நமக்கிருக்கும் உறவும் அமையும்.

இயேசு நமக்காக ஓர் இடத்தை ஆயத்தம்பண்ணிக் கொண்டிருக்கிறார். யோவான் 14:1-3. அது விவரிக்கமுடியாத அளவிற்கு மிகவும் அழகான இடமாகும். சொல்லப்போனால், ‘நீதிமான்களுக்குக் கிடைக்கும் வெகுமதியை விவரிக்க மனித மொழி போதாது. அதை நேரில் காண்பவர்கள்மட்டுமே அதை அறிந்துகொள்ளமுடியும். தேவனுடைய பரதீஸின் மகிமையை வரம்புள்ள எந்த ஒரு மனித மனதாலும் கிரகிக்கமுடியாது’.

புதிய வானமும் புதிய பூமியும் எப்படியிருக்கும் என்பதை நம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், விரைவில் நடக்கவிருக்கும் அந்தக் ‘கலியாணத்திற்காக’ நாம் காத்திருக்க வேண்டும் என்பதற்காகவே தேவன் யோவானுக்கு இந்தத் தரிசனத்தைக் காட்டினார். கொலோ 3:2 நமக்குக்கொடுக்கிற அழைப்பை வாசியுங்கள்.

தேவன் இந்த நிகழ்வுக்காக மிகவும் கவனமாக ஆயத்தப்படுத்தி வருகிறார்; இந்த ‘கலியாணம்’ நமக்கு ஒரு எதிர்பாராத அதிர்ச்சியாக அமைந்துவிடக்கூடாது என்று ஆசைப்படுகிறார். மத் 22:1-14; 25:1-13.

இந்த நிகழ்வு நடப்பதைக் காணப்போகிற சபை இந்தப் பிரஞ்சம்தான்; இந்த வரலாற்றின் மிகமுக்கியமான கதாபாத்திரங்களாக நாம் இருக்கிறோம். இயேசு தமது இரண்டாம் வருகையின்போது நம்மை அழைத்துச் செல்லுகிற அந்த ‘மணவாட்டியாகிய’ நகரத்தில் நாமும் இணைந்துகொள்வோம். தேவனுடைய மக்களும் (பரிசுத்தவான்கள்) மணவாட்டி என்று அழைக்கப்படுகிறார்கள். வெளி 19:7. ஏனெனில், அவர்கள் வெளி 21:2 சொல்கிற நகரத்தில் இருப்பார்கள்.

பரிசுத்த நகரத்தைப்பற்றிய இந்த அழகான விவரிப்பு, தேவனுடைய மக்களுக்கும் அந்த நகரத்திற்கும் இடையே ஒரு நெருக்கமான தொடர்பு இருப்பதைக் காட்டுகிறது; ஏனெனில் இருவருமே ‘மணவாட்டி’ என்று அழைக்கப்படுகிறார்கள். ‘இராஜ்யத்தின் தலைநகரமாகவும் பிரதிநிதியுமாகவும் விளங்கும் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம், ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி என்று அழைக்கப்படுகிறது’.

---

**இதை இப்போது கற்பனை செய்வது நமக்கு ஏன் இவ்வளவு கடினமாக இருக்கிறது? இந்த வசனங்களில் நமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருப்பதை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? வெளி 21:9–27.**

# ஆட்டுக்குட்டியைப் பின்பற்றுங்கள்

நித்தியத்தில் நீங்கள் எதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறீர்கள் என்று யாராவது உங்களிடம் கேட்டிருக்கிறார்களா? ஒரு குழந்தை, 'புலி மீது சவாரி செய்வது', 'ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் சறுக்கி விளையாடுவது' அல்லது 'வெவ்வேறு கிரகங்களுக்குப் பறப்பது' என்று சொல்லலாம். நீங்கள் ஒரு வாலி பரிடம் கேட்டால், அவர் 'இனிமேல் வீட்டுப்பாடம் செய்ய வேண்டியதில்லை' அல்லது 'காயம்படாமல் என் நண்பர்களுடன் பரலோகத்தைச் சுற்றிப்பார்ப்பது' என்று சொல்லலாம். பெரியவர்களிடம் கேட்டால், அவர்கள் 'இனி வலியோ, வேதனையோ அல்லது மரணமோ இல்லாத ஓர் இடத்தில் இருப்பது' அல்லது 'பிரிந்த நம் அன்புக்குரியவர்களுடன் மீண்டும் இணைவது' என்று சொல்லலாம். இந்தப் பதில்கள் அனைத்தும் நல்லவை, உண்மையானவை; புதிய வானத்திலும் புதிய பூமியிலும் நாம் ஆவலோடு எதிர்நோக்குவதற்கு எவ்வளவோ காரியங்கள் உள்ளன. நித்தியம் நம் இருதயங்களுக்குள் கனன்று கொண்டிருக்கிறது; இங்கே நடக்கும் இந்த வாழ்க்கையைவிட மேலான ஒன்று நிச்சயம் இருக்கவேண்டும்.

**நித்தியத்தில் நாம் வேறு என்ன ஆசீர்வாதங்களை ஆவலுடன் எதிர்நோக்கலாம்? ஏசா 25:8; வெளி 7:17; 21:4.**

நிச்சயமாகப் பரலோகத்தின் மிகப்பெரிய ஆசீர்வாதம், இறுதியாக இயேசுவை நேரில் காண்பதும், விழுந்துபோன இந்தப் பூமியில் அவர் நமக்காகச் செய்தவற்றுக்காக அவருக்கு நேரில் நன்றி கூறுவதுமே ஆகும். சிலுவையில் அவர் பட்ட பாடுகளின்மூலம், நித்திய மரணத்திலிருந்து நம்மை இரட்சித்ததற்காக, நாம் அவரை முழுமனதோடும் ஆராதிக்கவும் வழிபடவும் விரும்புவோம். வெளி 5:12.

யோவான் ஸ்நானன் இயேசுவை 'தேவ ஆட்டுக்குட்டி' என்று அறிமுகப் படுத்தினார். யோவான் 1:36. யோவானுடைய சீடர்களில் இருவர் இதைக் கேட்டு இயேசுவைப் பின்பற்றினார்கள். யோவான் 1:37. நாமும் அப்படியே செய்யவேண்டும் என்று வெளி 14:4 சொல்கிறது: 'ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே'. இருப்பினும், நாம் பரலோகத்தில் அவரைப் பின்பற்ற விரும்பினால், முதலில் இங்கே இந்தப் பூமியில் அவரைப் பின்பற்றவேண்டும்.

ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுவே நமது மேய்ப்பராகவும் இருக்கிறார்; நிகரற்றவராக அவர் நம் பாதைகளை வழிநடத்துகிறார். நாம் சந்திக்கும் கடினமான காலங்களில் இது நமக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது. இயேசு நம்மை வழிநடத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டார், பரலோகத்திலும்கூட அவர் நம்மைத் தொடர்ந்து நடத்துவார். 'சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவர் அவர்களை மேய்த்து, அவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்.' வெளி 7:17. அவருடைய மக்களாகிய நாம், பரலோகத்தில் எப்பொழுதும் அவருடைய பிரசன்னத்தில் இருக்க விரும்பி, அவரைப் பின்பற்றுவோம். தேவனுடைய மக்களின் ஒரு முக்கியமான அடையாளம் என்னவென்றால், 'அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்' வெளி 22:4. அதாவது, நாம் எப்போதும் அவரைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்போம்.

# 'வாருங்கள்!'

'வாரும்' என்கிற இதே அழைப்பு இன்று நமக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

**பின்வரும் வசனங்களை வாசித்து, அவர் உங்களுக்கு விடுக்கும் அழைப்பைக் கவனியுங்கள்: மத் 11:28–30; ஏசா 55:1–3; யோவான் 6:44.**

பரிசுத்த ஆவியானவர் இன்று உங்களை இயேசுவிடம் இழுக்க விரும்புகிறார். தாம் வரும் வரை, இன்று முதல் ஒவ்வொரு நாளும் தம்மிடத்திற்கு வந்து, தம்மில் நிலைத்திருக்கும்படி இயேசு உங்களை அழைக்கிறார். நீங்கள் அதற்கு இணங்கி அவரிடம் வரும்போது, உங்கள் இருதயம் மென்மையாகும்போது, உங்கள் மனம் அவரிடம் சரணடையும்போது, நீங்கள் பெரிய சமாதானத்தை உணர்வீர்கள். ஏனெனில், நீங்கள் எவ்வளவு தகுதியற்றவர்களாக உணர்ந்தாலும், இந்தப் பூமியின் கடைசி நாளில் அவர் உங்களை எழுப்புவார். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை' என்றார் இயேசு. யோவான் 6:37.

பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து, மற்றவர்களை இயேசுவுடனான இரட்சண்ய உறவுக்குள் அழைப்பது அவசரப்பணி என்பதை நாம் உணரவேண்டும். வெளி 22:17.

இந்த அழைப்பு முற்றிலும் இலவசமானது, தேவனுடைய கிருபையினால் கொடுக்கப்படும் ஓர் ஈவு. நாம் அவரை நம் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு, நம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழுப் பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூரும்போது, இந்தப் பூமியிலும் வருங்காலத்திலும் நம்முடைய வாழ்க்கை என்றென்றைக்குமாக மாற்றப்படும். உப. 6:5.

இயேசு நம்மை அவரிடம் வரும்படி அழைப்பதுபோலவே, வேதாகமத்தின் கடைசி வார்த்தைகளும் இந்த வாக்குறுதியை அளிக்கின்றன: 'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்' வெளி 22:20.

எவ்வளவு சீக்கிரம்?, நாம் மரிக்கும்போது கண்களை மூடுகிற அடுத்த கணமே கிறிஸ்து மீண்டும் வருவதைக் காண்போம். நம்முடைய வாழ்க்கை எவ்வளவு வேகமாக ஓடுகிறது என்பதைச் சிந்தித்துப்பார்த்தால், இயேசுவும் அவ்வளவு வேகமாகவே நமக்காகத் திரும்பி வருகிறார் என்று அர்த்தம். ஒருவேளை உயிர்த்தெழுதலின்போது நமது முதல் எண்ணம் இப்படி இருக்கலாம்: 'ஆச்சரியமாக இருக்கிறது ஆண்டவரே, நீர் சொன்னதுபோலவே மிகச் சீக்கிரமாக வந்துவிட்டீர்!'.

மெய்யாகவே, இப்போது நாம் ஒரு கண்ணாடியில் காண்பதுபோல நிழலாட்டமாகக் காண்கிறோம். ஆனால் அப்பொழுது நாம் அவரை நேருக்கு நேராகக் காண்போம். காத்திருப்பதில் சோர்ந்து போகாதீர்கள். தேவனுடைய அன்பிலும் அவருடைய நன்மையிலும் விசுவாசமும் நம்பிக்கையும் வைத்து, இந்த ஏக்கத்தை எப்பொழுதும் உங்களுக்குள் உயிர்ப்புடன் வைத்திருங்கள். கர்த்தராகிய இயேசுவே, தயவுகூர்ந்து சீக்கிரமாய் வாரும்!

---

**உறுதியுடன் நிலைத்திருப்பதற்கான விசுவாசத்திற்காகவும், உங்களுக்காக மரித்து, உங்களுக்காகவே மீண்டும் சீக்கிரமாய் வரப்போகிறவரிடம் உங்களை முழுமையாகவும் முற்றிலும் ஒப்படைக்கும் விசுவாசத்திற்காகவும் இப்பொழுதே ஜெபியுங்கள்.**

# மேலும் படிக்க:

'தேவனுடையவார்த்தையை உட்கொள்வதன் மூலம் நாம் கிறிஸ்துவின் மார்க்கத்தைப் பெறாவிட்டால், தேவனுடைய நகரத்திற்குள் பிரவேசிக்க நமக்குத் தகுதி இருக்காது. உலக உணவை உண்டு, உலகக் காரியங்களை நேசிக்கும்படி நம் சுவைகளை நாம் பழக்கப்படுத்தியிருந்தால், பரலோக நீதிமன்றங்களுக்கு நாம் தகுதியற்றவர்களாக இருப்போம்; பரலோகத்தில் நிலவும் அந்தத் தூய்மையான, பரலோகச் சூழலை நம்மால் ரசிக்கமுடியாது. தேவதூதர்களின் குரல்களோ, அவர்களுடைய சுரமண்டலங்களின் இசையோ நம்மைத் திருப்திப்படுத்தாது. பரலோகத்தின் மேன்மையான அறிவு நம் மனதிற்கு ஒரு புரியாத புதிராகவே இருக்கும். நாம் கிறிஸ்துவின் நீதியின்மீது தாகமும் பசியும் கொண்டிருக்கவேண்டும்; அவருடைய கிருபையினால் ஏற்படும் மறுரூபமாக்கப்படுதலின் தாக்கத்தால் நாம் செதுக்கப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பரலோகத் தூதர்களோடு இணைந்து வாழ்வதற்கு நாம் தகுதியுள்ளவர்களாக மாறுவோம்...

'அப்பொழுது தேசங்கள் பரலோகத்தின் சட்டத்தைத் தவிர வேறு எந்தச் சட்டத்தையும் கொண்டிருக்காது. அனைவரும் துதியின் ஆடையை அணிந்தபடி, ஒரு மகிழ்ச்சியான மற்றும் ஐக்கியமான குடும்பமாக இருப்பார்கள்... அந்தக் காட்சியைக் கண்டு விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரிப்பார்கள்; அப்பொழுது தேவனும் கிறிஸ்துவும் இணைந்து, "இனிப் பாவமும் இல்லை, மரணமும் இல்லை" என்று பிரகடனம் செய்வார்கள்.'

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *எலன் ஒய்ட்டின் 'ஆரம்பக்கால எழுத்துக்கள்' புத்தகத்தில் 14-20ம் பக்கங்களில் பரலோகத் தரிசனம்பற்றி எழுதப்பட்டுள்ளதை முடிந்தால் வாசியுங்கள் அல்லது கேளுங்கள். அதில் உங்களுக்கு மிகவும் பிடித்த பகுதி எது?*

2. *இயேசுவை நீங்கள் நேருக்கு நேர் காணும் வரை, அவருடனான உங்கள் உறவை வலுவாக வைத்திருப்பதற்கு, இந்தக் காலாண்டின் பாடங்களில் எந்த விஷயத்தை நீங்கள் முக்கியமாக நினைவில் கொள்ள விரும்புகிறீர்கள்?*

3. *பரலோகம்குறித்த இந்த நம்பிக்கையை உங்கள் வாழ்க்கையில் யாருக்குச் சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது? கூடிய விரைவில் அவர்களிடம் இதைப் பகிர்ந்துகொள்வதாக உறுதி எடுத்துக்கொள்ளுங்கள். நினைவில் வையுங்கள்: உங்களிடமே இல்லாத ஒரு நம்பிக்கையை உங்களால் மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள முடியாது.*

**பாடச்சுருக்கம்:** நாம் நம் இலக்கை நோக்கிக் கவனம் செலுத்தும்போது, 'உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவினுடைய நாள்வரைக்கும் முடித்து வருவார்' என்கிற நம்பிக்கையோடு இருப்போம். பிலி 1:6. தேவன் உங்களுடன் இந்த உறவைத் தொடங்கினார், அவரே அதை நிறைவு செய்வார். அந்த நாளுக்காக நாம் காத்திருக்கும்போது, விசுவாசத்திலும் அன்பிலும் வளருவோமாக; அதே வேளையில், விசுவாசத்தினால் நமக்குக் கிடைக்கும் கிறிஸ்துவின் நீதியைமட்டுமே சார்ந்திருப்போமாக.

# அமெலியா தேவனுக்குக் கொடுத்த வாக்குறுதி

**முவாம்பா முப்புண்டு**

அமெலியாவால் நல்ல ஒரு எதிர்காலத்தை கற்பனைபண்ண முடியவில்லை. பல ஆண்டுகளாக மனநலப் போராட்டங்களைச் சந்தித்து வந்தார், மற்றவர்களின் கடுமையான வார்த்தைகளாலும் செயல்களாலும் ஏற்பட்ட வலியைச் சுமந்துகொண்டிருந்தார். ஒருநாள், அவர் வாழ்க்கையை முடித்துக் கொள்ளலாமா என்றுகூட யோசித்தார்.

அப்போது தனது நண்பருடன் பேசிய ஒரு உரையாடல் அவருக்கு நினைவுக்கு வந்தது. தன்னை காயப்படுத்தியவர்களுக்காக ஜெபிக்கும்படி அவர் அமெலியாவை ஊக்குவித்திருந்தார். மாற்றத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்த அமெலியா, அதை முயற்சி செய்து பார்க்க முடிவு செய்தார். "சங்கீதம் 37:5 நினைவுக்கு வந்தது, நான் அழுதுகொண்டே அந்த வாக்குறுதியை பற்றிக்கொண்டேன். நான் அவருக்கு சேவை செய்ய விரும்புவதாகவும், அவர் விரும்பும் மனிதராக மாற விரும்புவதாகவும் தேவனிடம் சொன்னேன். 'ஆண்டவரே, இந்தச் சிக்கலில் இருந்து நீங்கள் எனக்கு உதவினால், நான் உங்களுக்காகப் பணியாற்றுவேன்' என்று வாக்குறுதி அளித்தேன்" என்று அமெலியா கூறினார்.

அமெலியாவின் ஜெபம், அவரது வாழ்க்கையை தேவன் மாற்றுவதற்கான கதவுகளைத் திறந்தது. தன்னை மட்டுமே சிந்திக்கவைத்த கசப்பான உணர்வுகளிலிருந்து விடுபட்ட அவர், இப்போது தேவனுடைய அன்பைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள விரும்பினார். ஒருநாள், 'உலகளாவிய ஊழிய முன்னோடியாக' மலைப்பகுதியில் உள்ள ஒரு அட்வென்டிஸ்ட் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்ற வாய்ப்பு வந்திருப்பதாக அமெலியாவின் நண்பர் அவரிடம் கூறினார். அங்கு செல்ல அவர் உறுதியாக இருந்தார்.

பள்ளியில் பாடம் நடத்திய பிறகு, அவர் மாணவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் சந்திப்பார். அட்வென்டிஸ்ட் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், அந்த சமூகத்தில் பெரும்பான்மையாக இருந்த இயற்கை வழிபாட்டாளர்களுக்கும் அவர் ஆராதனைகளை நடத்தினார். ஆனால், அமெலியாவின் இந்த பணிக்கு எல்லாரும் ஆதரவு அளிக்கவில்லை.

ஒரு மாலை வேளையில், மாணவர்களின் கல்வித்திறன் குறித்து விவாதிக்கவும், பள்ளிக்கான தனது திட்டங்களைப் பகிர்ந்துகொள்ளவும் அவர் ஒரு பெற்றோர்–ஆசிரியர் கூட்டத்தை நடத்தினார். அவர் பேசத் தொடங்கி நீண்ட நேரம் ஆவதற்கு முன்பே, அந்தக் கிராமத்தின் தலைவர் அங்கு வந்து ரகளையில் ஈடுபட்டார். அமெலியா அவரைப் பொருட்படுத்தாமல் இருக்க முயன்றார், ஆனால் அமெலியாவைப் பேசவிடாமல் கூச்சல்போட்டார்.

அமெலியா ஆலயத்திற்குச் சென்று, முழங்காலிட்டு, "தேவனே, எனக்கு உதவும், தயவு செய்து எனக்கு பலத்தைத் தந்து, இந்தக் கூட்டத்தை வழிநடத்தும்" என்று கெஞ்சினார். தேவபிரசன்னத்தை உணர்ந்தவர், புதிய துணிச்சலுடன் மீண்டும் கூட்டத்திற்குத் திரும்பினார். அந்தக் கிராமத் தலைவரின் பகைமை குறையவில்லை, ஆனால் அமெலியா தன் நிதானத்தை இழக்காமல், அவருடைய கேள்விகளுக்கு மரியாதையுடன் பதிலளித்தார். பெற்றோர் தன் பக்கம் நிற்கவேண்டும் என்று அந்தத் தலைவர் வற்புறுத்தினார், ஆனால் அவர்கள் அமெலியாவிற்கு ஆதரவாக உறுதியாக நின்றனர்.

இறுதியில், அந்தக் கூட்டம் ஒரு முடிவுக்கு வராமலேயே முடிந்தது. ஆனால் தேவன் தன்னை ஒவ்வொரு சவாலிலும் வழிநடத்துவார் என்று நம்பி, அவருக்கு அளித்த வாக்குறுதியில் உண்மையாக இருக்க அவர் உறுதியுடன் இருந்தார்.